D.V.No : 2 / 2019

DATE : 03 -02-2021

P.W. *1* இளவரசி

*ச த்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது*

குறுக்கு விசாரணை

எனது தகப்பனாருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். எனக்கு ஒரு தம்பி. எனது அம்மா பெயர் வசந்தா என்றால் சரிதான். எனது தாயார் எனது கணவரின் அத்தை என்றால் சரிதான். எனது அம்மா இறந்துவிட்டார். எங்கள் திருமணம் நாங்கள் இருவரும் காதலித்து பெரியோர்களால் முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு எனது கணவரின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தார் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும் எனது கணவரும் தாராபுரம் அருகே செட்டியார் தெரு, மாரியம்மன் கோவில் பின்புறம் தனியாக குடித்தனம் செய்தோம் என்றால் சரிதான். எங்கள் திருமணத்தில் விருப்பம் இல்லததால் எனது கணவருக்கு அவரது பெற்றோர் வகை சொத்துக்களுக்கும் எந்த பாத்தியமும் இல்லை என 11.05.2005 தேதியில் எனது கணவர் ஒரு பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த விவரம் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பத்திரம்தான் அது. அந்த பத்திரம் அசலுடன் ஒப்பீடு பார்க்கபட்டது. அந்த ஆவணம் எ.ம.த.சா.ஆ.1 ஆகும். நாங்கள் செட்டியார் தெருவில் குடியிருந்த வீட்டின் கதவு எண்.159/3 என்றால் ஞபாகம் இல்லை. அந்த வீடு 2007 ம் வருடம் விற்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. விற்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்று ம் அதை நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. தாராபுரம் செட்டியார் தெருவில் நாங்கள் குடியிருந்த வீட்டில் இருந்து 10 வீடு தள்ளி சேட்டு என்பவர் குடியிருக்கிறார் என்றால் தெரியாது. எனது பெரியம்மா பெயர் சின்னகண்ணு என்றால் சரிதான். அவரது மகன் மகன் சேகர். அவரும் தாராபுரத்தில் எங்கள் வீட்டு அருகே குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நாங்கள் குடியிருந்த வீட்டின் அருகில் வீரமாத்தியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலில் சிறிய சந்து அதன் முன்பு கேட் போட்டுள்ளது என்றால் சரிதான். அதன் உள்ளே நுழைந்து தங்க முடியாது என்றால் சரியல்ல. உள்ளே சென்று பூஜை செய்கிறார்கள். குழந்தைகள் இருவரும் யார் பாதுகாப்பில் இருக்கிறார்கள் என்றால் எனது கணவரிடம் இருக்கிறார்கள். எனது கணவர் 2 வது திருமணம் 5 வது எதிர்மனுதாரரை செய்து கொண்டது சம்பந்தமாக

ஓமலுர், தீவட்டிபட்டி இரண்டு காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். இரண்டு காவல் நிலையத்திலும் இரு தரப்பினரையும் அழைத்து விசாரணை செய்தார்கள். விசாரணைக்கு பிறகு இரு காவல் நிலையத்திலும் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கவில்லை. 2 ம் திருமணம் நடந்தது சம்பந்தமாக ஆதாரம் ஒப்படைக்காததால் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் எனக்கும் சேட்டு என்பவருக்கும் தகாத உறவு இருப்பதாக எச்.எம்.ஒ.பி.245/2018 விவகாரத்து மனு தாக்கல் செய்த பின்னிட்டு தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனக்கும் சேட்டு என்பவருக்கும் தகாத உறவு இருப்பதை எனது குழந்தைகள் பார்த்து விட்டு எனது கணவரிடம் சொன்ன பிறகுதான் அவர் விவாகரத்து மனு செய்தார் என்றும் அதனால் தான் எனது குழந்தைகள் என்னுடன் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் 1 ம் எதிர்மனுதாரரையும் 5 ம் எதிர்மனுதாரரையும் ஒரே இடத்தில் பிடித்ததாக சொல்வது பொய் என்றும் நான்தான் 15 க்கு மேற்பட்ட ரவுடிகளுடன் சென்று 1 ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் வீட்டில் அத்து மீறி நுழைந்து பிரச்சனை செய்தோம் என்றும் இது குறித்து 2 ம் எதிர்மனுதாரர் ஓமலுர் காவல் நிலையத்தில் என் மீதும் மற்ற நபர்கள் மீது புகார் கொடுத்து மன ரசீது எண்.162/2019 பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் இருவரும் ஒரே வீட்டில் இருந்ததை பார்த்து விட்டுதான் அங்கு சென்றேன். அப்போது இருவரும் வீட்டின் அட்டையை உடைத்து விட்டு வெளியே ஓடி விட்டார்கள். நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், இரண்டு குழந்தைகளும் 1 ம் எதிர்மனுதாரருடன்தான் இருந்தார்கள் என்றும் அவர்களுக்கு அனைத்து சங்கதிகள் தெரியும் என்றால் சரியல்ல. ஓமலுரில் தாக்கல் செய்த விவாகரத்து மனு அரூர் சார்பு நீதிமன்றத்திற்கு உயர் நீதிமன்றத்தில் மனு செய்து அந்த விவாகரத்து மனு அரூருக்கு மாற்றப்பட்டது என்றால் சரிதான். நான் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் 13.03.2005 தேதியில் செம்மாண்டபட்டி ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி திருமண மண்டத்தில் திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் மீது 23.05.2013 ல் ஓமலுர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகார் மனு ரசீதில் எனது கணவர் வீட்டிற்கு சரியாக பணம் கொடுப்பதில்லை என கண்டுள்ளது என்றால் சரியல்ல. ஆனால் எனது புகாரில் அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அநத புகாரில் எனது கணவர் என்னை கத்தியால் உடலில் கீறியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதற்காக சிகிச்சையில் சேர்ந்து மருத்துவம் செய்ததற்கான ஆவணம் எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். ம.த.சா.ஆ.4 புகார் என்னால்

எழுதப்பட்டதா என்றால் ஆமாம். நான் எழுதியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் வேறு என்றும் அதை மறைத்து இந்த புகாரை வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் சேட்டு என்பவருக்கும் இருந்த தகாத உறவை எனது கணவர் தெரிந்து கொண்டததால்தான் அவர் 5 ம் எதிர்மனுதாரரை 2 ம் திருமணம் செய்து கொண்டதாக குற்றம் சுமத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. 5 ம் எதிர்மனுதாரருக்கும் எனது கணவருக்கும் எந்த வித தொடர்வு இல்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு எந்த அசையும் அசையா சொத்துக்களும் இல்லை என்றும் அவர் கூலி வேலைக் சென்ற வருகிறார் என்றால் சரியல்ல. அவா கூலி வேலைக்கு சென்றுதான் இரண்டு குழந்தைகளும் பராமரித்து படித்து வைக்கிறார் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் எனது குழந்தைகளை என் பராமரிப்பில் விட கோரி எந்த பரிகாரமும் இந்த மனுவில் கேட்கவில்லை என்றால் சரியல்ல. குழந்தைகளை என் வசம் ஒப்படைக்க கோரி எந்த நீதிமன்றத்திலும் எந்த மனுவும் போடவில்லை என்றால் சரிதான். எனது குழந்தைகளை காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தபோது அவர்கள் என்னுடன் வர மறுத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. எனது கணவர் விட மறுக்கிறார். எனது குழந்தைகளை போலிசார் விசாரிக்கவில்லை. எனது குழந்தைகளுக்கு எனது தகறான நடவடிக்கை தெரிந்துதான் என்னுடன் வர மறுக்கிறார்கள் என்றால் சரியல்ல. நானும் எனது கணவரும் தனிக்குடித்தனம் இருந்த காலத்தில் பலமுறை பிரச்சனை செய்து எனது தகப்பனார் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரியல்ல. பலமுறை ஊர் பெரியவர்கள் வைத்து பஞ்சாயத்து பேசி சேர்த்து வைத்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பேசும்பொழுது இனிமேல் முறையாக நடந்தகொள்ளவேண்டும் என அறிவுரை சொல்லியும் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 31.05.2019 தேதியில் உண்மையில் ஒரு சம்பவம் நடந்திருந்தால் நான் நேரில் சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றும் பொய்யான புகார் என்பதால் அஞ்சல் மூலம் அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த புகாரை போலிசார் விசாரித்து பொய்யான சங்கதிகள் என முடித்து விட்டார்கள் என்றால் சரியல்ல. நான் தீவட்டிபட்டி, ஓமலுர் காவல் நிலையத்தில் கொடுத்த அனைத்து புகார்களும் பொய்யானவை என முடிக்கபட்டது என்றால் சரியல்ல. நான் வசிப்பிடம் கோரியுள்ள கதவு எண்.159/3 .எற்கனவே விற்கபட்டது என்றும் எனது கணவர் கூலி வேலை செய்து குழந்தைகளை பராமரிப்பதால் எனக்கு வசிப்பிடம், உணவு, உடை, மருத்துவம் ஆகியவை கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் மிகுந்த சிரம்மத்திற்கு இடையில் தனது இரு குழந்தைகளையும் பராமரித்து வருகிறார் என்றும் அவரை பழிவாங்கும் என்னத்தில் இந்த புகாரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவரின் சகோதரர் விஜயகுமார் என்றால் சரிதான். அவருக்கு திருமணம் ஆகி தனியாக

வசிக்கிறார் என்றால் சரிதான். நானும் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களுடன் ஒரே வீட்டில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. ஒரு வருடம் தனிக்குடித்தனம் இருந்து விட்டு பிறகு ஒன்றாக இருந்தோம். நான் சொல்வது போல ஒன்றாக இருக்கவில்லை என்றால் சரியல்ல. 5 முதல் 7 எதிர்மனுதாரர்களுக்கும் இந்த புகாருக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றும் அவர்களுக்கு தொல்லை கொடுக்க வேண்டி எதிர்தரப்பினராக சே◌ர்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மீது தவறு இருக்கும் காரணத்தினாலும், எனது கணவர் கூலி வேலை செய்து குழந்தைகளை பராமரிப்பதால் நான் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.